www.tamilarangam.net

# பெண்கள் செய்தி மடல்

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்

மடல் - 7:1 பங்குனி 2005

## பொருளடக்கம்

"வாழ்வோம்" - சர்வதேச பெண்கள்தினம்

பெண்களுக்கு இழைக்கப்படும்....

என் முடிவுகள் எப்போதும்...

உருண்டு வரும் துயரங்கள்

தாமதப்பார்வையில்...


கலாபம் கலைமன்றம்


இழந்தது இறுதியாக
எழுவது உறுதியாக
என்பதே சபதமாக
எம் வாழ்வை
எதிர்கொள்வோம்

*ஆசிரியை*

# வாழ்வோம்

சர்வதேச பெண்கள் தினம் - மார்ச் 2005





எழுதுவதும் மீண்டும் எழுதுவதும் விழுந்ததை மறப்பதும் வாழ்க்கையைத் தொடர்வதும் இயற்கையை ஏற்பதும் இயற்கையோடு வாழ்வதும் மனிதரது வாழ்க்கை நியதியாகும்

அண்மையில் பொங்கிய ஆழிப் பேரலை எமது நம்பிக்கையை முற்றிலும் அழிக்கவில்லை எமது வாழ்வு தொடரத்தான் போகிறது. வாவியுடனும், கடலுடனும், குளத்துடனும், கிணற்றுடனும், நீர் நிலைகளுடனும் இரண்டறக் கலந்து எமது வாழ்வு தொடரத்தான் போகிறது விலகி விலகி விரக்தியின் எல்லையில் எத்தனை காலந்தான் அழுது புலம்புவது?

அடுத்த சந்ததியின் வாழ்வை எப்படி நாம் மறப்பது..,,,,? போதும் அந்த பொழுதுகள். இனி வரும் விடியல்கள் இயற்கையின் மடியினில் ஒளிபரப்பும். நம்பிக்கையுடன் கண் விழிப்போம். நம்பிக்கை எனும் ஒளி விளக்கை ஏந்தி சர்வதேச பெண்கள் தினத்தை வரவேற்றுக் கொண்டாடுவோம்.

வாழ்வோம் என்பதே எமது வாழ்வின் மந்திரமாகட்டும். வாழ்வோம் என்ற உறுதியுடன் எமது எதிர்காலத்தைப் பாதுகாப்போம்.

மனச் சுமை விலக்கி நம்பிக்கையை கட்டியெழுப்பும் முகமாக 2005 சர்வதேச பெண்கள் தின இணைப்பாளர் ஜீவகாவின் ஒழுங்கமைப்பில் "வாழ்வோம்" எனும் தொனிப்பொருளில் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தினரின் சர்வதேச பெண்கள் தின நிகழ்வுகள் மட்டக்களப்பு சென் செபஸ்தியார் ஆலய முன்றலில் 17-03-2005 அன்று நடைபெற்றது.


முதலில் கடல் வரைந்த ஓவியக் கண்காட்சி யுடன் மகளிர் தின நிகழ்வுகள் நகரத் தொடங்கின. பெண்கள் தம் உறவாக உயிர்களை மட்டும் நினைப் பதில்லை. பலவித பொருட்களுடன் தம் நாட்களை பிணைத்து உறவாடி தம் வாழ்வை வளப்படுத்து கின்றனர். தம் வீட்டிற்காக தம் அழகுக்காக, தம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தொழிலுக்காக, தம் சந்ததிக்காக என சின்ன சின்ன பொருட்களில் எல்லாம் அவர்கள் உறவு வளர்கிறது. கண்மூடி கண்திறப்பதற்குள் உயிரினும் உயிரான அவள் உறவுகள், சொத்துக்கள் அத்தனையும் கடலில் கை நழுவி செல்ல அவ் ஏக்கத்தில் இருந்து மீண்டெழ முடியாதவர்களாய் அவர்கள் செயலற்று இருப்பதை காண்கின்றோம்.



"இழப்பதற்கு எம்மிடம் இனி எதுவுமேயில்லை" என வெறுமை பூத்த மனங்களுடன் ஒரு பாதி சமுதாயமே இருக்கையில் "இயற்கையில் எடுப்பதற்கு எதுதான் இல்லை" எனும் நம்பிக்கையை இத்தருணத்தில் அவர்கள் மனங்களில் கட்டியெழுப்புவது நமது ஒவ்வொருவரினதும் கட்டாயக் கடமையாகும். இருப்பிடம் இருந்து எமது இறுதி மூச்சுக் காற்றுவரை இருப்பது இயற்கையிலேயே எனும் உண்மையை உணர்த்த வேண்டும். இழப்பில் இருந்தே அவர்கள் எதிர்காலத்திற்கு ஏணிவைக்க வேண்டும். "வாழ்வோம்" எனும் வசந்தத்திற்கு நாம் அனைவரும் செல்ல வேண்டும்.






இதற்காகவே அலையோடு போய் அலை போட்ட கோலத்துடன் மீண்டு வந்த பொருட்களை எல்லாம் காட்சிப்படுத்தினோம்.

சிதைவுகளாய் அல்ல புதிய பாதைச் சுவடுகளாய் அனர்த்தத்தால் புரையோடிப் போய் இருந்த மக்களின் மனப்புண்களின் சித்திரக் கோடுகளை பூமி கிழித்த சரித்திரமாய் தொங்க விட்டோம். சந்தோச வாழ்வைக் கட்டியெழுப்ப இச் சரித்திரங்கள் உட்கார்ந்திருப்பது கண்காட்சிக்காய் அல்ல. காலத்தின் சாட்சிக்காக, காலத்தின் சாட்சியாக.



மூச்சுக்காற்றாய் நான் மிதந்தேன்
நடப்பது எல்லாம் பார்த்திருந்தேன்
சாட்சியாக வந்தேன் இங்கு நானே

எவ் அலையையும் எதிர் கொள்ளும் மானிடர் நாம் எனும் "சுனாமியின் எதிர் அலை" நாடகம்
(நிலாவெளி பாடசாலை மாணவர்கள் - திருகோணமலை)



www.tamilarangam.net



பெண் நொந்தால் சம்பவமாகவும் ஆண் நொந்தால் சரித்திரமாகவும் மாற்றும் சமுதாயத்தின் மாற்றத் திற்காய் கேள்வி கேட்டு நிற்பவர்கள் மூன்றாவது கண் உள்ளூர் அறிவுத்திறன் செயற்பாட்டுக் குழு.



வாய்க்கால் தண்ணி ஆனந்தமாய் ஓட வழி அமைக்கும் பெரியவர்களிடமே சிறுவர் வாழ்வும் ஆனந்தமாய் மாறும் பொறுப்பு உள்ளது என்பதை உணர்த்துவது “ஆனந்தமாய் வாழ்வோம்” நடனம். (நாவற்குடா சிறுவர் குழு)



“மீண்டும் எழுவோம்” பாடல் (வண்ணத்துப் பூச்சி பூங்கா, மட்டக்களப்பு)



“வாழ்கைக்குமீண்டும் புறப்படுவோம்” அபினயப் பாடல் (மீசான் காத்தான்குடி)



'வாழ்வில் இல்லை வரட்சி எனும் “துளிர் விடும் துளசி” -நாடகம் (பெண்கள் அபிவிருத்தி மன்றத்தின் கலாபம் கலைக்குழு)



“சிறு நண்டு மணல் மீது படம் ஒன்று கீறும்
சிலவேளை இதை வந்துகடல் கொண்டு போகும்
எறிகின்ற கடல் என்று மனிதர்கள் அஞ்சார்
எது வந்ததெனில் என்ன அதை வென்று செல்வார்”
அளிக்கை (சூரியா பாடினிகள் குழு,
பல்கலைக் கழக மாணவர்கள், உப பாடினிகள்குழு)



உனது சிறு நேர வடித்தெடுப்பில் உன்னால் வடித்தெடுக்க முடியாமல் போனது எமது துணிவை எனச் சவால் விடுகிறார். “வடித்தெடுக்க வருகிறோம்” கவிதையில் த. சுமிதா (திருச்செந்தூர்)

www.tamilarangam.net

# பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் வன்முறைகளுக்கு எதிரான ஆண்களின் செயல்வாதம்



"இது அவர்கள் பிரச்சினை" என தள்ளியிருந்தது ஒரு சமுதாயம். "அவர்கள் பிரச்சினை அவர்களைத் தாக்கும்போது நாமும் ஏன் பாதிக்கப்படுகிறோம்....? " யோசிக்காமல் தள்ளியிருந்தது அதே சமுதாயம். ஏனெனில் பாதிப்பின் விளைவுகளை மறைமுகமாகவே பெற்றுக்கொண்டிருந்தார்கள் இவர்கள். "பெண்ணுக்கோ ஆணுக்கோ எவ்வினை ஏற்படினும் அதன் பதில் விளைவுக்கு இரு பகுதியினருமே உட்படுகிறார்கள். அப்பாதிப்பானது ஒட்டுமொத்த சமுதாயத்தின் ஆக்க பூர்வ அபிவிருத்தியை தாக்குகிறது. மக்களை பின்னடைவான வாழ்க்கைக்கு இட்டுச் செல்கிறது" இது சமத்துவமான சந்தோச சமுகத்தை கட்டியெழுப்ப பாடுபடும் பெண்களின் குரல்களாக இருந்தது.

"இது நமது பிரச்சினை எம்முள் நாம் கேள்வி எழுப்புவோம்" என "பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறைகளுக்கு எதிரான ஆண்களில் குரல்" களாக 3வது கண் உள்ளூர் அறிவித்திறன் செயற்பாட்டுக் குழுவினர் இவ்வருட சர்வதேச பெண்கள் தின நிகழ்வுகளை நடத்தினர். இக் குழுவினர் பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறைக்கு எதிரான ஆண்களின் செயல்வாதம் எனும் செயற்பாட்டை 2004 ஐப்பசி மாதம் கருவப்பங்கேணியில் ஆரம்பித்தனர். இவர்களின் செயற் பாடு இரு நோக்கங்களைக் கொண்டதாக அமைகிறது.
I. பெண்கள் ஆண்களின் ஆதிக்கத்திலிருந்து மீளுதல்
II. பெண்கள் சமூகக் கட்டுப்பாடு, ஒடுக்கு முறைகளில் இருந்து மீளுதல்

ஏனெனில் ஆணாதிக்கக் கட்டுப்பாடுகளாலும், சமூகக்கட்டுப்பாட்டு ஒடுக்குமுறைகளாலும் பெண்கள் அதிகம் வன்முறைக்கு உட்படுத்தப்படுகின்றனர். இது ஒரு சமூகப் பிரச்சினையாய் உள்ளது. இவ்வன் முறையில் இருந்து பெண்களை மீட்க வேண்டும். அது முழுச் சமூகத்தின் பொறுப்பு.

இன்று இச் சமூகத்தின் முன்னேற்றத்திற்கு பொறுப்பாய் நிற்கும் பாரிய பொறுப்பில் பங்கெடுக்கும் இக்குழுவினர் பயிற்சிப்பட்டறைகள், கலந்துரையாடல்கள் மூலம் நாடகம், கவிதை, பாட்டு போன்றவடிவங்கள் ஊடாக பெண்களுக்கு இழைக்கப்படும்வன்முறைக்கு எதிரான கருத்துக்களை மக்கள் முன் கொண்டு செல்கின்றனர். ஆண்களின் ஆதிக்கக் குரல்கள் பெண் அடிமைத்தனத்தை வளர்த்துக் கொண்டு செல்லும்போது ஆண்களின் குரல்கள் பலத் தொலிப்பது சமூக மாற்றத்தின் ஒரு வளர்ச்சியும், சர்வதேச பெண்கள் தின நிகழ்வுகளின் வரலாற்றின் சிறப்பம்சமுமாகும்.

*உலக வரலாறு கூறும் ஆண்கள், பொறுமையின் எல்லையைத் தாண்டிய பின்னர் செய்த புரட்சிகரச் செயற்பாடுகளைப் போல், அல்லாது, பெண்கள் தமது விடுதலைக்கான செயற்பாடுகளை மனித முகத்துடன் முழு மனிதருக்குமான விடுதலைக்கான போராட்டமாகச் செய்கின்றமையாகும். இது தான் பெண்ணிலைவாதம் கற்றுத்தரும் உன்னதமான பாடம்.*

*உலகின் மனித குலத்தின் எதிர்காலத்திற்கே சவாலாக உள்ள எயிட்சுக்கு மருந்தை இன்னும் காணமுடியவில்லை. ஆனால் பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தீர்ப்பதற்கான மருந்து நம்மிடமே உள்ளது.*

*எனவே இன்று உலகின் மனித குலத்தின் எதிர்காலத்தையே கேள்விக்குள்ளாக்கும் வகையில் பெண்களுக்கு எதிராக இழைக்கப்பட்டுவரும் வன் முறைகளுக்கு எதிராகப் பெண்களால் நடாத்தப்பட்டு வரும் ஜனநாயக ரீதியிலான, மனித முகத்துடனான போராட்டத்தில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டியது மனித நேயத்தை நேசிக்கிற ஒவ்வொரு மனிதரதும் குறிப்பாக ஆண்மகனினதும் இன்றியமையாத காலத்தின் கட்டாயக் கடமையாகும்.*

*எதிர்காலத்தில் இவ்வுலகில் மனிதர் வாழ வேண்டுமாயின் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் முற்றாகக் களையப்பட வேண்டும். இதனைக்களைய வேண்டிய முழுப்பொறுப்பும் ஆண்களிடமே இருக்கின்றது. மாறாகப் பெண்கள் தான் இதனைக்களைய வேண்டும் என்று ஆண்கள் மறுத்தால் எதிர்கால உலகில் மனிதர் வாழ்வதற்கான உத்தரவாதம் இருக்கும் என்பதனை உறுதிப்படுத்த முடியாது போய்விடும்.*

**து. கௌரீஸ்வரன்.**



www.tamilarangam.net

# என் முடிவுகள் எப்போதும்...



"இப்பொழுது மிகவும் சுதந்திரமாக என் முடிவுகளை நானே எடுக்கிறேன். எல்லா முயற்சிகளிலும், பயிற்சிகளிலும் முழுமையாய் தைரியமாய் ஈடுபடுகின்றேன். அனைத்து முயற்சிகளும், பயிற்சிகளும் நான் எதிர்பார்த்ததை போலவே மிகுந்த பயனை எனக்கு வழங்குகின்றன. நிச்சயம் என்னால் என்னையும் என் குடும்பத்தையும் காப்பாற்ற முடியும் நல்லதொரு எதிர்காலத்தை பெற்றுக் கொடுக்க முடியும் எனும் நம்பிக்கை எனக்குண்டு"

மாவட்ட சமுர்த்தி அலுவலகத்தினால் நடத்தப்பட்ட சர்வதேச பெண்கள் தின நிகழ்வன்று தொழில் பயிற்சி முடித்த பெண்களுக்கு தையல் இயந்திரம் வழங்கும் நிகழ்வின்போது அப் பெண்களில் சிலரால் கூறப்பட்ட கருத்துக்கள் இவை. எனினும் இவர்கள், தாம், கணவனை இழந்த அல்லது கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் எனும் அறிமுகத்துடனேயே தமது கருத்தை முன் வைத்தனர். நாம் சிந்திப்பதும் செயற்படுவதும் பெண்கள் ஆண்களுடன் வாழும்போதே இந்நிலமையில் சுயமாக அவர்களின் வாழ்வு இருக்க வேண்டும் என்றே!

பெண்களின் கருத்துக்கள், திறமைகள் மதிக்கப்படாதிருத்தல், முக்கியத்துவம் உணரப் படாதிருத்தல், பெண்கள் மேல் ஆண்களின் மேலான ஆதிக்கம், ஆதிக்க அன்பு, ஏகாதிபத்தியத்தை நிலை நிறுத்த ஆண்கள் குடும்பத்தை, குடும்ப அங்கத்தவர்களை பாவித்தல் போன்ற பல்வேறு முரண்பாட்டுக் காரணிகள் பெண்களின் இயல்பு வளர்ச்சியை முடக்கிப் போடுகின்றன. இந்த முடக்கல், முரண்பாடு அனைத்துக்கும் அடிப்படைப் பிரச்சினை புரிந்துணர்வு அற்ற நிலையே!

"சிரிப்பதற்கு கூட நேரம் வேண்டும். ஒரே ஒரு புன்னகை அது கூட "டைம் வேஸ்ட்" (time waste) என்னைப் பார்த்து சிரித்தாலும் நான் உடனே சிரிக்கமாட்டேன்" இப்படியாக சமூகப் பொறுப்பு வாய்ந்த மட்டத்தில்-தான், இருப்பதாக கூறி அறிமுகப்படுத்தும் ஒரு சகோதரியின் பேச்சு. "மொழி" எல்லோருக்கும் எல்லா மொழியும் தெரிந்திருக்க நியாயமில்லை. சிலருக்கு பேசக் கூட முடியாத நிலை. ஆனால் "புன்னகை" எமக்கு மேலான சக்தி எமக்களித்த வரப்பிரசாதம் உடனுக்குடன் நட்பை பரிமாறும் ஊடகம் , புரிந்துணர்வின் அடிப்படை. பேசத்தெரியாத உயிரினம் கூட வாலாட்டி புன்னகையை வெளிப்படுத்துகையில் உயர் சிந்தனைக் குணங்களைக் கொண்டிருப்பதாக கூறிக்கொள்ளும் நாம், புரிந்துணர்வின் அடிப்படையை தொட்டுப் பார்க்கவே முடியாத நிலையில் உள்ளோம். அத்திவாரக் கல்லை அப்புறப்படுத்தி விட்டு சமத்துவக் கூரை வேய்தலைப்பற்றி பேசுகிறோம்.

வீட்டின் உள்ளே ஆயிரம் முரண்பாட்டு முட்களை வளரவிட்டு வெளியே பசும் புற்கள் வளர்ப்பதற்கு வியர்வை சிந்தும்படி கூறுகிறோம். எல்லாமே ஒன்றுக்கொன்று தொடர்பற்றதாய் அடிப்படையற்றதாய் முரண்பாடுள்ளதாய் உள்ளது. வீட்டில் இருந்தே விலங்கைப் பிடித்தபடி சுதந்திரக் காற்றை சுவாசிக்கும் படி வெளியே உரத்துக் கத்தும் நம் நிலையை நாம் மாற்ற வேண்டும். முதல் சுதந்திர விதை வீட்டில் விதைப்போம். நீர் ஊற்ற வேண்டியதில்லை. காற்றின்நீரை தானே உறிஞ்சி கிளை பரப்பி இன்னும் இன்னும் விதை தூவி தானே தாவி வெளி எங்கும் நிழல் தரும் சுதந்திர விதையை வீட்டின் உள்ளே முதல் விதைப்போம்.

## அவனே சுனாமி

அசுர அலையால் அள்ளப்பட்டு
உடைமை, உயிர்களையும்
பறி கொடுத்தோம்.
தொடரலையாக வரும்
அதன் நினைவுகளில் இருந்து
ஒருவாறு மீண்ட பின்பு
காதில் வந்து சேர்ந்த செய்தி
கரைமுள்ளாய் குத்துதம்மா

அவன் ஒரு ஆண்மகன்
சுனாமியை விட கொடிய அசுரன்
குற்றுயிராய் கிடந்த
குமரியின் உடலுக்குள் சுகந்தேடினான்
அவளது காதணியை அபகரிக்க
காதையும் வெட்டினான்
சவத்தை தேடுதல் போல்
சுகத்தையும் சொத்தையும்
அபகரிப்பவன் அவனே சுனாமி

திருமதி. ஜெகதீஸ்வரி நாதன், (தம்பிலுவில் ஜெகா)

www.tamilarangam.net

# உருண்டு வரும் துயரங்கள்

உலகம் உருண்டை என்பதாலோ என்னவோ கழட்டி விடும் துயரங்கள் வேறு வேறு வடிவெடுத்து மீண்டும் மீண்டும் மக்களுடன் மோதிக் கொள்கிறது. "எத்தனை காலந்தான் இழுபட்ட போலி வாழ்வு..." என்று முன்னர் மீட்டிய பாடலை மனதில் மீண்டும் மீட்டியபடி மீண்டும் நாம் முகாமிற்குள் சுழல்கின்றோம். மக்களுடன் மக்களாக மக்களின் நிலை நின்று பேசுவதற்கு.

இன்று அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் இம் மக்களுக்காய் துயர் துடைப்பு வேலைகளில் இறங்கியுள்ள போதும், அலையில் ஒதுங்கும் தூசுகளாய் பொறுப்பு வாய்ந்தவர்களால் பாதிக்கப்பட்ட மக்களின் அவலங்களும் கேட்பாரற்ற தூசாய் தட்டி விட, அவை எம் கண்ணில்பட்டு கரிக்கின்றது. இது ஒரு புறம்.... மறுபுறமோ முகாம்களுக்குள்......

"வன்முறை இல்லாத வீடும் நாடும் எமக்கு வேண்டும்". எமது குரல் முழுவதுமாய் பரவி கதவுகள் தட்டும்போதே பல கரையோர வீடுகளை இடித்து விழுங்கி விட்டது சுனாமி. இன்று வீடிழந்த மக்கள் முகாம்களில். மக்களை துரத்தி வரும் வாழ்க்கையுடன் சேர்ந்து துரத்துகின்றது வன்முறை பெண்களை.

குடும்ப வன்முறை முகாம்களுக்குள் தொடர்கிறது. இது ஒரு புறம்.... நிவாரணப் பணியாளர்களை மக்கள் சூழ அவர்களைச் சூழ்ந்துள்ள அவர்களது பல கேள்விகள்.... இன்னும் விடை தெரியாமல்.. கேள்விகளை சுமந்தபடி மக்கள்.

நிரந்தர மீள் குடியேற்றத் திட்டத்தின்படி எங்கு போய் இருப்பது, அங்கு என்ன தொழில் செய்து வாழ்வது...?, பழைய குடியிருந்த காணிகளின் நிலை என்ன...? இனி அதன் உரிமை யாருக்கு?

சொந்தம், பயிர்பச்சை நிலவளம்...?, புதிய காணியின் அளவு, குடும்ப அங்கத்தவர்களிடையே புதிய காணியை பகிரும் போது ஏற்படும் காணிப் பற்றாக்குறை, பிள்ளைகளுக்கான கல்வி வசதி, சுழன்று சுழன்று வரும் கேள்விகளுக்குள் இவர்கள் மிதந்து... புதையுண்டு.... எழும்பி.... தொலைந்து........

இவ்வாறு 26.12.04 அன்று ஏற்பட்ட கடற்கோளினால் இடம்பெயர்ந்து முகாம்களுக்குள் இயல்பு வாழ்வைத் தேடும்பெண்கள் பல துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.





இவர்களின் நலன்களுக்காகவும் உரிமைகளுக்காகவும் குரல் கொடுப்பதற்கு மட்டக்களப்பு - அனர்த்த முகாமைத்துவத்துக்கான பெண்கள் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு தொடர்ந்து செயற்பட்டு வருகிறது. இக் கூட்டமைப்பு அண்மையில் மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ செயற்பாட்டுக் குழுவினருக்கான அறிக்கை ஒன்றை வெளியிட்டது. விரிவான இவ் அறிக்கையின் தொகுப்பு பின்வருமாறு,

*மட்டக்களப்பு- அனர்த்த முகாமைத்துவத்துக்கான பெண்கள் கூட்டமைப்பினரிடமிருந்து மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ செயற்பாட்டுக் குழுவினருக்கான அறிக்கை*

*இடம் பெயர்ந்த பெண்களின் நலன்களும் உரிமைகளும். (12 தை 2005)*

*சுனாமிப் பேரழிவின் பின்னர் ஏற்பட்ட பாரதூரமான பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பதில் அரச அதிகாரிகளும் ஏனைய முகவர்களும் எதிர் கொள்ளும் அழுத்தங்களை நாம் அறிவோம். எனவேதான் மட்டக்களப்பைச் சேர்ந்த பெண்கள் கூட்டமைப்பினராகிய நாம் சுனாமி பேரழிவுப் பிரச்சினைகளை கைக்கொள்ளுகின்ற அரசாங்க அமைப்புகளுக்கும் ஏனையோருக்கும் இடம்பெயர்க்கப்பட்ட மக்களின் நலனுக்கான நீண்டகால திட்டம் தொடர்பாக எமது வளங்களையும், நிபுணத்துவத்தையும் தருவதற்கு விரும்புகின்றோம். பிரதேசத்திலுள்ள சகல பிரிவினரும் ஒன்றிணைந்து பணிபுரிய வேண்டிய தருணம் இது என நாம் கருதுகின்றோம்.*

*இடம்பெயர்க்கப்பட்டவர்களுடன் போதுமான அளவு கலந்துரையாடாமலும் அவர்களது விருப்பங்களை கேட்காமலும் அவர்களைத் தற்காலிகமாக இன்னோர் இடத்திற்கு மாற்றுவது குறித்த முடிவுகள் எடுக்கப்படுவதையிட்டு நாம் கவலை அடைகிறோம். உறைவிடவகை, தொழில் வாய்ப்புக்கள், சமூக ஆதரவு, பாதுகாப்பு அவரவர் சமூகத்துடனும் (உற்றார் உறவினர்) வீட்டுச் சூழலுடனும் உள்ள உளவியல் நெருக்கம் பற்றிய அவர்களது அபிப்பிராயங்கள் ஆர்வங்கள் ஆகியவற்றை கணக்கெடுத்து எத்தகைய*

www.tamilarangam.net

முடிவுகளும் எடுக்கப்பட வேண்டும்.

பெண்களது ஜீவனோபாயங்கள் பற்றிய அக்கறை, மீளக்குடியமர்த்தல் தொடர்பான முடிவுகள் எடுக்கும்போது இவை கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

குடும்ப அங்கத்தவர்களை இழந்தால் குடும்பத்தலைவிகளாக மாறியுள்ள பெண்களது மீள் இருப்பிடத் தேவைகள், விருப்பங்கள் குறித்து விசேட அக்கறை செலுத்தப்பட வேண்டும்.

இடம்பெயர்க்கப்பட்ட மக்களை மீளக் குடியமர்த்தும் ஒவ்வொரு இருப்பிடத்திலும்



பெண்களுக்கு மாத்திரமான குறிக்கப்பட்ட இடங்கள் அமைக்கப்பட வேண்டும் எனச் சிபார்சு செய்கிறோம்.

பெண்களைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடு களுடன் ஆண்கள் முகாம்களிலும், வெளியிலும் பயனுள்ள வேலைகளில் ஈடுபடும் வாய்ப்புக்களை ஏற்படுத்துதல் போன்ற முற்தடுப்புப் பொறி முறைகளுக்கான வழிவகைகள் செய்யப்பட வேண்டும்.

இடம்பெயர்க்கப்பட்டோர் உள்ள இருப்பி டங்களில் பெண்கள் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். அனைத்துக் குழுக்களிலும் பெண்கள் பிரதி நிதித்துவம் இருக்க வேண்டும். அவர்களது கருத்துக்கள் கணிக்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு இருப்பிடத்திலும் குறித்த கால ஒழுங்கில் வைத்திய சேவைகள் கிளினிக்குகள் - இயலுமானவரை பெண் வைத்தியக் குழுவினால் (பெண்களுக்குப் பிரத்தியேகமாக) நடத்தப்பட வேண்டும்.

தெளிவாகவும் உரிய காலத்திலும் தகவல்கள் பெண்களுக்குக் கிடைப்பதற்கான ஒழுங்குகள் வேண்டும். குறிப்பாக பதிவு செய்தல். வைத்திய சேவைகள், கிளினிக்குகள், உணவுப் பங்கீடு, சட்ட நிலை, இழப்பீடு தொடர்பான விடயங்கள். முகாம்களின் எதிர்கால நிர்வாகத் திட்டம்.

மேற்கூறிய வழிவகைகளானவ சுனாமிப் பேரழிவால் மிக மோசமான இழப்புக்களைச் சந்தித்த பெண்களது உளவியல் சமூகநல நிலையில் சாதகமான, சீரிய நன்மைகளை அளிக்கும் என்பதை நாம் வற்புறுத்துகிறோம்.

உள்ளூர் மற்றும் மாவட்டரீதியாகத் தீர்மானம் எடுக்கும் அனைத்து அமைப்புக்களிலும் வெவ்வேறு மீள்குடியமர் இடங்களைச் சேர்ந்த பெண் பிரதிநிதிகளையும் சேர்த்துக் கொள்ளுமாறு கோருகிறோம்.

**தொடர்பு முகவரி:**
மட்டக்களப்பு ~ அனர்த்த முகாமைத்துவத்துக்கான பெண்கள் கூட்டமைப்பு.
email - wcdmbati@yahoo.com
மேபா: சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்.,
20 டயஸ் வீதி, மட்டக்களப்பு email - suriyaw@slt.lk
பால்நிலையடிப்படையிலான வன்முறைகளை முற்றும் தடுப்பதற்கான செயற்றிட்டம்: கௌயார் சர்வதேசம்,
221, பார்வீதி, மட்டக்களப்பு.

# தாமதப்பார்வையில் தர்மபுரம்

தர்மபுரம்.... யார் செய்த புண்ணியமோ நாம் இன்றும் தப்பிப் பிழைத்து வாழ்கிறோம்" என்பதே தர்மபுர மக்களின் அங்கலாய்ப்பாகும். இவர்கள் ஒரே ஒரு சுனாமியால் மட்டும் தாக்கப்படவில்லை. கடந்த காலங்களில் ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களில் எல்லாம் தாக்கப்பட்டு பலமுறை இடம் பெயர்ந்து தற்போது ஆரயம்பதி பிரதேச செயலகத்திற்குட்பட்ட தர்மபுரக் கிராமத்தில் இடம் பெயர்ந்து வாழ்ந்து கொண்டிருந்தவர்கள் தான் இவர்கள்.

24.12.04 அன்று ஏற்பட்ட ஆழிப்பேரலையில் சிக்கி, சிதறுண்டு ஓடி தர்மபுர பாடசாலையில் இடம்பெயர்ந்திருந்து அங்கிருந்து வெளியேற்றப்பட்டு மீண்டும் தமது உடைந்த, வெடித்த வீடுகளுக்கு சென்று வாழ முடியாமல் கிடைத்த கூடாரங்களுடன் பொது இடத்தில் கூடாரம் அமைத்து, வெளித் தொடர்புகள், தகவல்கள் மிகவும் குறைவாகக் காணப்பட்ட நிலையில் வாழ்க்கையை ஓட்டுகிறார்கள்

கூடாரத்திலும் இவர்கள் வாழ்க்கை கேள்வியாகவே உள்ளது.



www.tamilarangam.net

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்

**அன்புடையீர்,**

நாம் கடந்த வருட இறுதி மாதங்களில் பெண் (9:2), செய்திமடல் உட்பட வேறு இரு புத்தகங்களையும் வெளியீடு செய்துள்ளோம் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

1. சிறகுகள் விரித்தோம்:-
பெண்கள் தம் பார்வையில், சமூகத்தின் சவால்களை பெண்கள் எவ்வாறு எதிர் கொள்கிறார்கள் என்பதைக் கூறும் கதைத் தொகுப்பு. விலை 100/=

2. பெண்கள் நலன்:-
பெண்களின் அடிப்படை சுகாதாரப்பிரச்சினைகளையும், மருத்துவ வழி காட்டல்களையும் விளக்கும் சுகாதாரக் கையேடு விலை 80/=

தங்களுக்கு எம் வெளியீடுகள் தேவையாயின் எம்முடன் தொடர்பு கொள்ளவும். இதற்குரிய கட்டணங்களை காசுக் கட்டளை அல்லது காசோலையாகவோ எமது விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.







## கலாபம் கலைமன்றம்



எமது கலாபம் கலைமன்றம் கடந்த ஒரு வருடமாக இயங்கி வருகிறது. இம்மன்றத்தில்15 பெண்கள், 10 ஆண்கள், 15 இளைஞர் யுவதிகள் , 10 சிறுவர்கள் அங்கத்தவர்களாக உள்ளனர். நோக்கம் கலைவடிவில் நாடகம், நடனம், தாளலயம் என்பவற்றின் மூலம் சமுதா யத்தில் நட்பணுகள், விழுமியங்கள், ஊக்கம் என்பவற்றைமக்கள் மத்தியில் கொண்டுசெல்வதே ஆகும்.

இம்மன்றத்தின் மூலம் "விடியலை நோக்கி", "துளிர்விடும்துளசி", "மறதிக் கந்தையா" எனப்பல தத்துவ, நாட்டுநடப்பு, நகைச்சுவை நாடகங்களையும், "அன்றும், இன்றும்" பழய புதிய பாடல் நடனங்களையும் மேடை யேற்றியுள்ளோம்.

எமது மன்றத்திற்கு இதுவரை எவ்வித பணம், பொருளுதவிகள் வெளியிலிருந்து கிடைக் கவில்லை நாமே சந்தா மூலம், பணம்சேர்த்து எமது கலாமன்றத்தை நடத்தி வருகின்றோம்.

யாருக்கு எந்த இடத்தில், எந்தநேரத்தில் எந்த தலைப்பில் நாடகம், நடனம் தேவைப்படுமோ அதை உரிய நேரத்தில் தருவதே எமது சிறப்பு. எமது இந்த மன்றத்தை மற்றவர்கள் மத்தியில் அறிமுகம் செய்து தருமாறு தயவுடன் கேட்கின்றோம். அத்துடன் உதவிகளையும் எதிர்பார்க்கின்றோம்.

நன்றி

இ. சறோ (தலைவி)

---

அழகு மிக்க கடல் தாயே
கோபம் கொண்டு ஏன் எழுந்தாய்
மறைந்தவர்கள் போதாதென்றா பேரலையை
அனுப்பி வைத்தாய்!

எழில் மிகுந்த இலங்கைத் தேசம்
பொலிவிழந்து போனதே!
பாதை மாறிப் போன மக்கள்
வலு இழந்து போனார்களே!

பொறுக்கவில்லை அநீதியென்று
பொங்கி எழுந்தாயா?

சகிக்கவில்லை தாயே - நீ தந்த அவலங்கள்
மீனவர்கள் பசியை போக்குவதற்காய்
உன் வளத்தை ஈன்றளித்தாய்
உன் பசி தீர்க்கத்தானா உயிர்களை நீ ருசித்தாய்?

உன்னருகில் வாழ்ந்த ஊர் மக்களையும்
உன் தயவில் பிழைத்த மீனவர்களையும்
உன் அழகை ரசிக்க வந்த
உல்லாசப் பிரயாணிகளையும்
உன் வலையில் சிக்கடிக்கத் தானோ?
நீ இத்தனை நாள் ஓய்வின்றிருந்தாய்!

ஜெ. ஜெகறுபன்

**சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்**

**இல. 20, டயஸ்லேன்,**

**மட்டக்களப்பு.**

**தொ. பேசி - 065-2223297**

முகவரி. ..................................

..................................

..................................

..................................

Issn No. 1391-6130



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்